Franciscans International
A voice at the United Nations

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வு

நிகழ்ச்சி நிரல் உருப்படி 2: OHCHR பற்றிய ஊடாடும் உரையாடல்

இலங்கை குறித்த அறிக்கை / உருப்படி 3 பொது விவாதம்

வாய்மொழி அறிக்கை (முன்கூட்டி பதிவுசெய்யப்பட்டது)

செப்டம்பர் 19, 2025

தலைவர் அவர்களே,

எனது பெயர் சுராச் நிலங்க. 2019 உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் போது ஷங்ரில்லா ஹோட்டலில் எனது மகன் கொல்லப்பட்டார். எனது மகனின் மரணத்துக்காக இலங்கை அரசாங்கத்திடம் நான் நீதி கோருகின்றேன்.

ஜனாதிபதியாக அனுர திசாநாயக்க நியமனம்பெற்று கிட்டத்தட்ட ஒரு வருடம் கழிந்துள்ள நிலையில், நீதியின் மீதான அரசாங்கத்தின் ஆர்வம் மங்கி வருகிறது. இந்த தாக்குதலில் உயிர் பிழைத்தவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் முழுமையான நிறைந்த நிவாரணத்தையும் வழங்க, உண்மை வெளிப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவது அவசியம்.

உயிர் பிழைத்த அனைவருக்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் நியாயமான, விரைவான மற்றும் போதுமான இழப்பீடுகளை அரசாங்கம் உறுதி செய்யவில்லை.

அத்துடன் நடந்துகொண்டிருக்கும் விசாரணைகள் கடுமையான குறைபாடுகளைக் கொண்டுள்ளன. தாக்குதலின் பின்னால் உள்ள 'மறை கரம்' இன்னும் தெரியாமலேயே உள்ளது.

முன்கூட்டியே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் தேவாலயங்கள், ஷங்ரில்லா ஹோட்டலின் விருந்தினர்களின் பாதுகாப்பு தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமை இதுவரை விவரிக்கப்படாத முக்கிய பிரச்சினையாகும்.

ஆகவே,பிரான்சிஸ்கன் இன்டர்நேஷனல், சமூக மற்றும் சமய மையம் ஆகியவை பின்வரும் விடயங்களை இலங்கை அரசாங்கத்துக்கு வலியுறுத்துகின்றன:

* பொறுப்புக் கூற வேண்டிய அனைவருக்கும் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட முழுமையான, சுயாதீனமான மற்றும் விரைவான குற்றவியல் விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர உதவுதல்

* பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான சர்வதேச முயற்சிகளுடன் ஒத்துழைக்கவும்

* பொருளாதார, சமூக மற்றும் உளவியல் குறித்து விரிவான மதிப்பீட்டிற்குப் பிறகு இந்த தாக்குதலில் உயிர் பிழைத்த அனைவருக்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும்* போதுமான, நியாயமான மற்றும் விரைவான இழப்பீடுகளை வழங்கவும்.

நன்றி.